# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 51/மா/2023**
**நாள்: 03.04.2023**

திரு.A.அஜித்குமார்,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி,
வேலூர். – எதிர்மனுதாரர்

வேலூர், சாமுவேல் நகர், கிழக்கு பாலார், கதவு எண்.37/C என்ற முகவரியில் வசிக்கும் திரு. A.அஜித்குமார் என்பவரின் 30.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2023–ல் பெறப்பட்டு 51/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர், சாமுவேல் நகர், கிழக்கு பாலார், கதவு எண்.37/C என்ற முகவரியில் வசிக்கும் திரு. A.அஜித்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 30.01.2023 நாளிட்ட தனது மனுவில்:

" நான் வேலூர் மாநகராட்சியில் 18வது வார்டுக்குட்பட்ட சாமுவேல் நகர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக குடிநீர் விநியோகம் செய்யப்படாமலிருக்கிறது. மேலும் எங்கள் கிராமத்தில் உள்ள குழாய்களில் தண்ணீர் வராமல் இருக்கிறது. இதனால் எங்கள் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளிலிருந்து வரும் தண்ணீரையே நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். அந்த sintex tankகளும் சுகாதாரமற்ற நிலைமையில் பழுதடைந்த நிலைமையில் உள்ளது. இதனால் எங்கள் கிராமம் மிகவும் சிரமத்தை சந்தித்து வருகிறோம். சுகாதார பாதிப்பும் ஏற்படுகிறது. இதனை குறித்து மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு அஞ்சல் மூலம் மனு அளித்தேன். மேலும் அவர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரில் சந்தித்தும் மனுவின் நகலை அவர்களிடம் அளித்தேன். ஆனால் இதுவரை நான் அளித்த மனுவின்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் மேலும் சிரமத்தை சந்தித்து வருகிறோம். எனது மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி ஆணையர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், மேலும் எங்கள் கிராமத்தில் RO plant வசதியுடன்கூடிய குடிநீர் வசதியை ஏற்படுத்தி தரவும், பழுதடைந்த sintex tankகளை மாற்றியமைத்து தரவும், தண்ணீர் விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுத்து உத்தரவிடும்படி தங்கள் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 13.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 07.03.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 27.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்றத்தில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"வேலூர் மாநகராட்சி 18வது வார்டுக்கு உட்பட்ட சாமுவேல் கிராமத்தில் சுமார் 120 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். கடந்த 2020 கொரோனா தொற்று காலத்திலிருந்து மேற்கண்ட பகுதியில் உள்ள குழாய்கள் மற்றும் சின்டெக்ஸ் டாங்க்குகள் பழுதடைந்த நிலையில் எங்கள் பகுதியில் குடிநீர் அளிக்கப்படவில்லை. இதனால் ஆழ்துளை கிணறுகளிலிருந்து வரும் தண்ணீரையே நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். எங்கள் பகுதியில் உள்ள பொது கழிவறைக்கு மேலே அமைந்துள்ள டாங்கின் மூலம் வரும் தண்ணீரை குடிப்பதற்கு நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். சுகாதாரமற்ற முறையில் குடிநீர் அளிப்பதால், எங்கள் பகுதியில் உள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சுகாதா சீர்கேட்டில் அவதிப்படுகின்றனர். இது தொடர்பாக மாநகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரை சந்தித்து மனு அளித்தும் எங்களது மனுவை யாரும் பரிசீலிக்கவில்லை. எனவே எங்கள் பகுதியில் உடனடியாக குடிநீர் வசதி ஏற்படுத்தித்தரவும், பழுதடைந்த சின்டெக்ஸ் டாங்குகளை பழுதுபார்த்திடவும், கடந்த இரண்டு ஆண்டுகளாக குடிநீர் வசதி செய்து தராத மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) வேலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 27.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

"வேலூர் மாநகராட்சி 18வது வார்டுக்கு உட்பட்ட சாமுவேல் கிராமத்தில் மூன்று மினி பவர் பம்புகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்கின்ற விவரத்தையும் மேலும் வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட பகுதியில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிகளை ரூ 2 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கி, 31.07.2023க்குள் பணி முடிக்கப்பட்டு சீராக குடிநீர் வழங்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 24.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரரின் கோரிக்கையின்படி வேலூர் மாநகராட்சி வார்டு எண்.8 சாமுவேல் நகர் பகுதியில், குழாய் பதித்தல் பணி மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதிக்காக மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு, 15.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கையாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கி 31.07.2023க்குள் பணி முடிக்கப்பட்டு, மேற்கண்ட இடத்திற்கு குடிநீர் சீரான முறையில் வழங்கப்படும்.

மேலும் சாமுவேல் நகர் பகுதியில் ஏற்கனவே மூன்று மினி பவர் பம்புகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதையும் தேவைக்கேற்ப மாநகராட்சி குடிநீர் வாகனம் மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மனுதாரர் தாங்கள் வசிக்கும் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக குடிநீர் வசதி இல்லாததால் உடனே குடிநீர் வசதி செய்து தர கோரியுள்ளார்.

வேலூர் மாநகராட்சி 18–வது வார்டுக்கு உட்பட்ட சாமுவேல் கிராமத்தில் மூன்று மினி பவர் பம்புகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. வாகனங்கள் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது எனவும் அப்பகுதியில் குடிநீர் விநியோக குழாய் பதித்தல் பணிக்காக ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டு 31.07.2023க்குள் பணிகள் முடிக்கப்பட்டு குடிநீர் சீரான முறையில் வழங்கப்படும் என்பதை வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7 (c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,
இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

வேலூர் மாநகராட்சி 18வது வார்டுக்கு உட்பட்ட சாமுவேல் கிராமத்தில் சுமார் 120 குடும்பத்தினருக்கு கடந்த 2020 கொரோனா தொற்று காலத்திலிருந்து மேற்கண்ட பகுதியில் உள்ள குழாய்கள் மற்றும் சின்டெக்ஸ் டாங்குகள் பழுதடைந்த நிலையில் குடிநீர் அளிக்கப்படாமல் உள்ளது. அவர்கள் ஆழ்துளை கிணறுகளிலிருந்து வரும் தண்ணீரையே பயன்படுத்தி வருகிறார்களை. பொது கழிவறைக்கு மேலே அமைந்துள்ள டாங்கின் மூலம் வரும் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர். சுகாதாரமற்ற முறையில் அந்த குடிநீர் உள்ளதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உடல்நலம் பாதிப்படைகின்றனர். மனுதாரர் இப்பொருள் தொடர்பாக மாநகராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரை சந்தித்து மனு அளித்தும் மனு பரிசீலிக்கப்படாததால் மனுதாரர் இம்முறைமன்றத்தை தற்போது நாடியுள்ளார். தடையற்ற சுகாதாரமான குடிநீர் வழங்கும் பொறுப்பு வேலூர் மாநகராட்சியின் பொறுப்பு. போதுமான பாதுகாப்பான குடிநீர் இல்லாததால் உடல் நல பாதிப்புகளால் அந்தப்பகுதி மக்கள் அவதிப்படுவது சரியான செயல் அல்ல. மேலும் அந்தப்பகுதி மக்கள் தங்களது அடிப்படை தேவையான குடிநீர் தொடர்பாக தங்கள் பகுதியில் இருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் சென்று தங்களது குறைகளை தெரிவித்திருக்க வேண்டும். வேலூர் மாநகராட்சி கள அலுவலர்கள் தங்கள் கடமையை சரிவர செய்திருந்தால் கடந்த இரண்டு வருடங்களாக வேலூர் மாநகராட்சி 18–வது வார்டுக்கு உட்பட்ட சாமுவேல் கிராமத்தில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள குழாய்கள் மற்றும் சின்டெக்ஸ் டாங்குகளை மாற்றி சரி செய்து ம்க்களின் அடிப்படை தேவையான குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திருக்க வேண்டும் மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய மற்றும் மெத்தனப்போக்கினால் அப்பகுதி மக்கள் கடந்த 2 வருடங்களாக சுகாதாரமான குடிநீர் கிடைக்காமல் இதுநாள் வரை பாதிப்பு அடைந்துள்ளனர்.

குடிநீர் விநியோக குழாய் பதித்தல் பணி மேற்கொள்ள ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கி 31.07.2023க்குள் பணி முடிக்கப்பட்டு மேற்கண்ட இடத்திற்கு குடிநீர் சீரான முறையில் வழங்கப்படும் என வேலூர் மாநகராட்சி ஆணையர்

அவரது அறிக்கையில் தெரிவித்தபடி அந்தப்பணிகளை விரைந்து முடித்திடவும், அதுவரை குடிநீர் லாரிகள் மூலமும் அந்தப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதையும், உறுதி செய்திட வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

Provision of Drinking water is an essential need on which no compromise could be drawn. The neglect of Samuel Nagar for long in providing drinking water by the Vellore Corporation is deplorable and sad when the basic duty of any Urban Local Body is to ensure extension of basic amenities like supply of drinking water throughout the year. The onset of summer will aggravate the situation still worse if the Vellore Corporation does not plan any precautionary measures like operating water tankers in the Samuel Nagar area. The Commissioner Vellore Corporation is directed to ensure that drinking water scarcity in the affected Samuel Nagar area does not dent the image of the Local Body adversely by organizing suitable measures to satisfy the drinking water requirements of the Samuel Nagar Zone.

The DMA may arrange for effective follow up of the directions of the Forum by the Vellore Corporation authorities promptly. The planned pipe lines laying at a cost of Rs.2/- Lakhs in the area should be executed and completed by 31/07/2023 as undertaken by the Commissioner Vellore Corporation.

2023-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.A. அஜித்குமார்,
எண்.37/C. கிழக்கு பாலார்,
சாமுவேல் நகர், வேலூர் – 632 004.

2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி, வேலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

4) இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உ...

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

03/04/23
செயலாளர்